இ) அடுத்து, ஒவ்வொரு வாக்கியமாக, எழுத்துரு, மதிப்பாய்வு செய்யப்படும். இந்நிலையில் உள்ள வினாக்கள்: வாக்கியம் தெளிவாகவும் விளங்கக்கூடியதாகவும் உள்ளதா? மொழியியலடிப்படையில் இது சரியா (வடிவமும் கட்டமைப்பும்)? ஒரு கருத்தை விளக்க மிக நல்ல சொற்கள் இருக்கின்றனவா? (சரிபார்க்க ஓர் அகரமுதலியைப் பயன்படுத்துக!).

ஈ) அடுத்து, இன்னொரு மாணவனின் / மாணவியின் முறை ஆகும்.

உ) குழுவின் எல்லா எழுத்துருக்களும் கலந்துரையாடியபோது, மாணவர்கள் தம் எழுத்துருவின் மேம்படுத்தப்பட்ட பதிப்பினை எழுதுவர். இந்நிறைவுப் பதிப்புகள் ஆசிரியரின் குறிப்புகளுடன் திருத்தப்படும். முடிவில், எல்லா மாணவர்களுக்கும் எழுத்துருக்கள் கிடைக்கச் செய்யவேண்டும். (கீழே பார்க்கவும் #12: இலக்கு வாசிப்பாளர் குறிப்பு)

## 2. தனியாக ஓர் எழுத்துருவை மீள்நோக்குதல் (பின்னர் அதுபற்றி ஆசிரியருடன் கலந்துரையாடல்)

2 - 9 ஆந் தரம் | 30 மணித்துளிகள்

கருவிகள்:
உசாத்துணை நூல்களும் அகரமுதலிகளும்

மற்றைய மாணவர்களுடன் இணைந்து எழுத்துரு பற்றி ஒரு கூட்டாகக் கலந்துரையாடும் வாய்ப்புகள் இல்லாதவிடத்து தனியாகவே ஓர் எழுத்துருவைப் பதிப்பித்தல் இன்றியமையாததாகும். (எ.கா. வீட்டு வேலையாக எழுத்து ஒப்படைகளில் ஈடுபடும்போது) எப்படியிருப்பினும் வாய்ப்புள்ளபோது, மாணவன் / மாணவி புறநிலைப் பின்னூட்டலைப் பெறவேண்டும் (பெற்றோர், உடன்பிறப்புகள், ஆகியோரிடமிருந்து) தனியாக தம் எழுத்துருக்களைப் பதிப்பிக்கும் பணியில் ஈடுபடும் மாணவர்களுக்கு பின்வரும் தெளிவான வழிகாட்டிகள் மற்றும் துணைசெய் வினாக்கள், மதியுரைகள் என்பவற்றை வழங்குவது இன்றியமையாததாகும்:

- என் எழுத்துருவின் தலைப்பை இன்னும் சுவையானதாகவும் உணர்வூட்டுவதாகவும் ஆக்குதற்கு அல்லது பொருள் பற்றிய தெளிவான அறிகுறியை வழங்குதற்கு நான் மீள் முறைப்படுத்தலைச் செய்யலாமா?
- என் எழுத்துரு தெளிவான கட்டமைப்பையுடையதா (முன்னுரை / கண்ணோட்டம், தலையாய உள்ளுடல், முடிவு / சுருக்கம்)? வளர்ச்சியடைதல் தர்க்கரீதியானதா? தலைப்புக்குள் நின்றுள்ளேனா?
- எழுத்துரு, படிப்பவரின் விருப்பினைக் கவருவதாக, சுவையான தகவலுள்ள வாக்கியத்துடன் தொடங்குகின்றதா?, அல்லது இதனை மேம்படுத்தமுடியுமா?
- மிகுதியாக மீண்டும் மீண்டும் கையாளாத தெளிவான சுருக்கமான சொற்களை நான் தேர்ந்தெடுத்துள்ளேனா?
- எனக்குத் தெளிவில்லாத இலக்கண வடிவங்கள் (காலங்கள், வினைவடிவங்கள்) உண்டா? யாரிடம் நான் அறிவுரை கேட்கலாம்? (இப்பகுதிகளைக் குறித்துவைத்து ஆசிரியரிடமிருந்து உதவி பெறலாம்.)
- என் எழுத்துரு சொல்லெழுத்துப் பிழைகளற்றதா, அகரமுதலிகளின் துணையுடன் ஐயங்களைத் தெளிவாக்கிக்கொண்டேனா? (அகரமுதலிகள் முதலியனவற்றை மாணவர்கள் அணுகக்கூடியதாக இருக்கவேண்டும், அவற்றைப் பயன்படுத்தத் தெரிந்திருக்க வேண்டியது இன்றியமையாதது. பள்ளி மொழியின் நெடுங்கணக்குக்கு எதிராக பாரம்பரியமொழியில் உள்ள எழுத்துக்களை அடையாளம் காண்பதற்கும், எழுத்துகளின் ஒழுங்கு பற்றிய விழிப்புணர்வுக்குமான உத்திகளை இது உள்ளடக்கியதாகும்.)